6th August 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் தற்போது நிர்ண யித்திருக்கக்கூடிய அளவை விட அதிகமாகக் கொடுப்பதற்குத் தூண்டுதலாக அமையும் வகையில் எவ்வளவுக் கெவ்வளவு அவர்கள் அதிகமாகக் கொடுக்கமுடியுமோ அதைக் கொடுக்கும் வகையில் அந்த விகிதாசாரத்தை மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய உத்தேசம் அரசாங் கத்திற்கு இல்லை.

* 146 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have proposed to extend any new concessions to teachers for the withdrawal from their Provident Fund accounts; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : Orders have been issued recently permitting—

(1) the part-final withdrawal for the education of the subscriber's sons or daughters in or outside India subject to certain conditions and for the marriage of subscriber's sons and daughters and, if he has no daughter, of any other female relation dependent on him; and

(2) for the final or part-final withdrawal for house building or for purchasing a house site.

திரு. வை. சங்கரன் : வைத்தியச் செலவுக்கு வேண்டுமென்றால் பிராவிடண்ட் பண்டிலிருந்து கொடுக்க வழி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வைத்தியச் செலவுக்கு மொத்த மாக அவ்வளவு பணம் வேண்டியிருக்காது. அப்படி ஏதாவது வேண்டுமென்றால் அந்த ஆசிரியர்கள் விண்ணப்பித்துக் கொள்ள லாம்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கட்ட நிலம்

* 147 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா--

(அ) வானூர் தொகுதி, திருச்சிற்றம்பலம் கூட்டுரோடில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி கட்டுவதற்கு 10 ஏக்கர் நிலம் கோரி, மேற்படி நிலம் வாங்கிக் கொடுக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Sri A. V. Naryanswami Naidu of Irumbai came forward to donate ten acres of land for the school.

(*b*) The Director of Secondary Education is examining the offer.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : இப்போதுள்ள பயிற்சிப் பள்ளி ஆபத்தான கட்டடத்தில், பழைய கட்டடத்தில் இருக்கிறது. தற்போது அந்தப் பள்ளிக்கூடம் சவுக்குத் தோப்புக்குள் பாதுகாப்பு இல்லாத நிலையில் இருக்கிறது. இடம் காணாது ஷெட் போட்டு வைத்திருக்கிறார்கள். இப்போது அதற்காகக் கொடுக்கப்பட்ட 10 ஏக்கர் நிலம் ரோட்டின் மேல் இருக்கிறது. அந்தப் பத்து ஏக்கர் நிலத்திலே கட்டடம் கட்ட வழி செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தானமாகக் கொடுத்ததைப் பாராட்டுகிறேன். அதை ஏற்றுக் கொள்வதில் சிக்கல் இல்லை. தானம் கொடுத்தவர் தன்னுடைய பெயரை வைக்கவேண்டுமென்று சொல்லுகிறார். ஒரு ஸ்தாபனத்தைப் பொறுத்தவரை அதற்கு ஆகும் செலவில் பாதித் தொகையை ஒருவர் ஏற்றுக் கொண்டால் தான் அவருடைய பெயரை வைக்கலாம் என்ற கொள்கை அனுசரிக்கப்பட்டு வருகிறது. இதிலே, அந்த மாதிரிப் பாதித் தொகை அளவு வராது. டைரக்டர் ஆஃப் செகண்டரி எஜுகேஷன் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறார்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அவர் தன்னுடைய பெயரை வைக்கவேண்டுமென்று விரும்புவதாகச் சொன்னார்கள். அப்படி பெயர் வைக்கவேண்டாமென்று சொன்னால் எந்த முறையை வகுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெயர் வைக்க வேண்டாமென்று சொன்னால், 10 ஏக்கரோ, 5 ஏக்கரோ கொடுப்பதை ஏற்றுக் கொள்வார்கள். அதற்கு மேல் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு நிதி திரட்ட வேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்கள் சம்பளம்

* **148 கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆரம்ப ஆசிரியர்களுக்கு, அடிப்படைச் சம்பளம் ரூ. 120 ஆக நிர்ணயிக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. இரா. நாராயணன் : பண்டங்களின் விலைவாசி ஏறுவதால் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் போதாத நிலை இருக்கிறது. அவர்களுக்கு அதிகக் குழந்தைகளும் பிறந்துவிடுகின்றன. ஆகவே, அடிப்படைச் சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அடிப்படைச் சம்பளம் ஓரளவு உயர்த்தப்பட்டிருக்கிறது. விலைவாசி உயருவதற்கு ஏற்ற வகையில்